**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு 2020/2021**

**இறுதிப்பரீட்சை - மட்டம் 3**

**இலங்கைச் சட்டங்களுக்கான அறிமுகம் - LLU 3703/LWU 1411**

**காலம் : 03 மணித்தியாலங்கள்**

---

திகதி : 02.09.2020 நேரம்: **மு.ப 9.30 – பி.ப 12.30**

---

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 06**

**நான்கு (04) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்கவும்**

**தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்**

01. சமன் என்பவன் கண்டியில் உள்ள இலங்கை மின்சாரசபையில் பொறியியலாளரொருவராக இருந்தான். அவனது பெற்றோர் பிலிமத்தலாவையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்கள். சமனின் தந்தையான ரன் பண்டா கண்டியரொருவர் என்பதுடன் 1948ம் ஆண்டில் சமனின் தாயாரான எல்பிட்டியவை வசிப்பிடமாகக் கொண்ட லலானி என்பவருடன் தீகத் திருமணமொன்றினை முடித்திருந்தார். சமன் அங்கு பணியாற்றிய போது, அதே இடத்தில் கணக்காளராகப் பணியாற்றிய அமலி என்பவளுடன் தொடர்பொன்றைக் கொண்டிருந்தான். அமலியின் தந்தையானான ஜெயலத் கிக்கடுவவை வசிப்பிடமாகக் கொண்டதுடன் கண்டியரான அவளது தாய் பிசோமெனிக்கே என்பவளை திருமணம் முடித்திருந்தார். அவர்கள் தமது திருமணத்தினை 1960ம் ஆண்டு பொதுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்ததுடன் பெரதேனியாவில் வாழ்ந்தனர். அமலி மற்றும் சமன் தமது திருமணத்தினைக் கண்டிய சட்டத்தின் கீழ் பதிவு செய்ய விரும்புகின்றார்கள்.

(அ.) சமன் மற்றும் அமலி தமது திருமணத்தினை கண்டியச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்ய முடியுமா?

(15 புள்ளிகள்)

(ஆ.) அமலியின் தந்தை அவளது தாயுடனான தனது திருமணத்தினை 1950ம் ஆண்டு பின்னத் திருமணமொன்றாகக் கண்டியச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்திருப்பின் உமது விடையில் மாற்றம் ஏற்படுமா?

(10 புள்ளிகள்)

உமது விடையை பொருத்தமான தீர்ப்புச்சட்டங்கள் மற்றும் நியதிச்சட்டங்களின் அடிப்படையில் ஆராய்க.

02. 1774ம் ஆண்டின் கம்பல் எதிர் கோல் வழக்கினால் வகுக்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் 1799ம் ஆண்டின் பிரகடனம் ஆகியவை இலங்கையில் அமுலிலுள்ள சட்டங்களின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தின. எவ்வாறாயினும் ஆங்கிலச்சட்டமானது ஒரு அன்னிய சட்டமுறையாக இலங்கைச் சட்டமுறைக்குள் நுழைந்தது. இது இருவேறுபட்ட முறைகள் மூலமாக நிகழ்ந்தது.
பொருத்தமான நியதிச்சட்டங்கள் மற்றும் வழக்குத் தீர்புக்களை அடிப்படையாகக் கொண்டு அவ்விரண்டு முறைகளையும் விளக்கிக் கட்டுரையொன்று வரைக.

(25 புள்ளிகள்)

03. மனோகரன் என்பவன் 1980ம் ஆண்டு கனடாவில் பிறந்ததுடன் அவனது பெற்றோரானவர் யாழ்ப்பாணத் தமிழர்களாவர். மனோகரன் 10 வயதாக இருக்கும் போது அவனது பெற்றோர் இலங்கைக்குத் திரும்பி வந்ததுடன் யாழ்ப்பாணத்தில் வசித்தனர். அவன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சேர்ந்ததுடன் தனது பாடசாலைக்கல்வியினை அங்கு பூர்த்தி செய்தான். 2000ம் ஆண்டில் சட்டமாணி நுழைவுத்தேர்வில் சித்தியெய்திய மனோகரன் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினுள் நுழைந்தான். அவனது பட்டப்படிப்பு மற்றும் தொழில்முறைத் தகுதியைப் பூர்த்தி செய்தபின்னர் கொழும்பு NCB வங்கியில் சட்ட அலுவலராக அவன் இணைந்தான். 2007ம் ஆண்டு அதே வங்கியில் பணிபுரியும் சட்ட அலுவலரான அமிர்தா என்பவளை மணோகரன் திருமணம் முடித்தான். அமிர்தா யாழ்ப்பாணத்தினைப் பூர்வீகமாகக் கொண்டதுடன் அவனது பெற்றோரும் யாழ்ப்பாணத் தமிழர்களாவர். திருமணத்திற்குப் பின்னர் வெள்ளவத்தையில் வீடொன்றை அவர்கள் வாங்கியதுடன் அங்கு வசித்தார்கள். குறித்த திருமணத்தின் மூலம் அவர்களுக்கு தேவா மற்றும் தாரா எனும் பெயருடைய இரு பிள்ளைகள் இருந்தார்கள். 2012ம் ஆண்டு அமிர்தா NCB வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு இடமாற்றம் பெற்றதுடன் பிள்ளைகள் யாழ்ப்பாணம் மகளீர் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டனர். மனோகரன் புதிய வீடொன்றை யாழ்ப்பாணத்தில் கட்டியதுடன் அமிர்தா மற்றும் பிள்ளைகள் மனோகரனின் பெற்றோருடன் குறித்த வீட்டில் வசித்தார்கள். மனோகரன் NCB வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ள முயற்சித்த போதும் அது சாத்தியமாகவில்லை. மனோகரன் வெள்ளவத்தையில் உள்ள வீட்டில் வசித்ததுடன் தவறாமல் அவனது குடும்பத்திற்கு பணம் அனுப்பினான். மாதத்திற்கு ஒருமுறை அவனது குடும்பத்தினைப் சந்திப்பதற்காகச் சென்றான். 2020ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்துகொண்டிருந்த போது குருநாகலில் நடந்த வாகன விபத்தொன்றில் தீடீரென மனோகரன் இறந்தான்.

மனோகரன் பொதுச்சட்டத்தாலா அல்லது தேசவழமைச்சட்டத்தாலா ஆளப்படுவான் என அமிர்தா உங்களது ஆலோசனையை நாடுகின்றாள்? அவளுக்கு ஆலோசனை வழங்குக.

மனோகரனின் பூர்வீகமானது மட்டக்களப்பாகவும் அவனது குடும்பம் அங்கு வாழ்ந்தார்களாயின் உமது விடையில் மாற்றம் ஏற்படுமா?

(25 புள்ளிகள்)

04. ‘மற்றைய சட்டங்களிலிருந்து வேறுபாடான அம்சங்களைக் கொண்ட ஒரு சட்டமாக இலங்கைச் சட்டமுறையில் முஸ்லீம் சட்டமானது காணப்படுகின்றது. இது நீண்ட வரலாற்றினைக் கொண்டதுடன் மதக்கோட்பாடுகள் மற்றும் மற்றைய சட்டமுறைமைகளின் செல்வாக்கினால் இது படிப்படியாக வளர்ச்சியடைந்தது. எனினும் இலங்கையின்

தற்போதைய சட்டமுறைமையில் முஸ்லீம் சட்டத்தில் சில முரண்பாடான பகுதிகள் காணப்படுகின்றன. முஸ்லீம் சட்டத்தின் சில முரண்பாடான கோட்பாடுகளை மாற்றுவது குறித்து தொடர்ந்து விவாதம் நடைபெற்று வருகின்றது'.

முஸ்லீம் சட்டம் பற்றிய உமது அறிவு மற்றும் மேற்கூறிய கூற்று என்பவற்றைக் கருத்தில் கொண்டு 'இலங்கையின் முஸ்லீம் சட்டமும் தற்போதைய பிரச்சனைகளும்' எனும் தலைப்பில் சட்டச் சஞ்சிகையொன்றில் பிரசுரிப்பதற்காக கட்டுரையொன்றினை வரையவும்.

உமது கட்டுரையானது பொருத்தமாக வழக்குச் சட்டங்கள் மற்றும் நியதிச்சட்டங்களால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(25 புள்ளிகள்)

05. 'ஒரே நியாயாதிக்கத்துள் முரணான சட்டக்கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் ஏற்பாடாகும்போது சட்ட முரண்பாடுகள் இடம்பெறக்கூடும். இது ஆள்சார் சட்டங்களுக்கிடையில் அல்லது ஆள்சார் சட்டங்கள் மற்றும் மேலாதிக்க பொதுச்சட்டத்திற்கிடையில் நிகழலாம். அதேபோல் சட்டமுரண்பாடானது மேலாதிக்க சட்டத்திற்கு இடையிலேயே நடைபெறலாம்'
மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?

மேலுள்ள கூற்றின் அடிப்படையில் இலங்கையின் சட்டமுறைமையில் பன்மைத்துவத்தின் பிரச்சனைகள் பற்றிய தத்துவார்ந்த மற்றும் நடைமுறை அறிவினை ஆராய்க.

குறித்த முரண்பாடான நிலைமையை தவிர்ப்பதற்கான பரிந்துரை உம்மால் செய்யப்படவேண்டும்.

(25 புள்ளிகள்)

06. பின்வரும் தலைப்புக்களில் சுருக்கமான குறிப்புக்கள் எழுதுக.

(அ) காலணித்துவ ஆட்சிக்கு முந்தைய காலத்தில் கண்டிய இராசதானியின் கீழான நீதித்துறை மற்றும் நீதி நிர்வாக அலுவலர்கள்.

(10 புள்ளிகள்)

(ஆ) டச்சுக்காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த நீதிமன்ற முறைமை.

(05 புள்ளிகள்)

(இ) தற்போதைய நீதிமன்ற அமைப்பின் படிநிலை மற்றும் நீதிமன்றங்களிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள்.

(10 புள்ளிகள்)